முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA1 பரீட்சை - 2019 யூலை

## (AA11) நிதிக் கணக்கீட்டு அடிப்படைகள்

(Financial Accounting Basics)

2019-07-27
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *விடைகள் உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருந்தால், அவற்றைத் தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின் வரைவிலக்கணங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் (OTQ's) தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு செயல்* ***வினைச் சொல்லைக்*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொற்களின் நிரலில் தரப்பட்டுள்ள* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பதினைந்து (15) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

***1.1*** *முதல்* ***1.8*** *வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையினைத் தெரிவு செய்க. உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கங்களை வினா ஒழுங்கில் (ஒன்றன்கீழ் ஒன்றாக) எழுதி அவற்றிற்கு எதிரே தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை எழுதுக.*

**1.1** கணக்கீட்டின் ஒரு நோக்கமாக அமைவது:

(1) வியாபாரத்தின் தன்மையை விளங்கிக் கொள்வதற்கு

(2) பொருளொன்றின் விற்பனை விலையைத் தீர்மானிப்பதற்கு

(3) வியாபாரத்தின் நிதி நிலையை மதிப்பிடுவதற்கு

(4) உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் பலவீனங்களை இனங்காண்பதற்கு (02 புள்ளிகள்)

**1.2** கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை வழங்குநர் ஒருவருக்குத் திருப்பி அனுப்புவதற்காகக் கொள்வனவாளரால் பயன்படுத்தப்படும் சரியான மூல ஆவணமாக அமைவது:

(1) செலவுத்தாள் (2) விற்பனைப் பட்டியல்

(3) வரவுத்தாள் (4) கொடுப்பனவு உறுதிச்சீட்டு (02 புள்ளிகள்)

**1.3** "ஒரு நிறுவனம் கலைத்தல் நிலைக்கு உள்ளாகும் வரையும் அது நீண்ட காலத்திற்குத் தொடரும் என கருத்திற் கொள்ளப்படுகின்றது."

மேலுள்ள கூற்றுடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கருவாக (Concept) அமைவது:

(1) வரலாற்றுக் கிரய எண்ணக்கரு (2) தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

(3) தேறல் எண்ணக்கரு (4) உரிம எண்ணக்கரு (02 புள்ளிகள்)

**1.4** வியாபாரமொன்றின் இலாபத்தினைக் கணிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் சரியான சமன்பாடாக அமைவது கீழ்வருவனவற்றுள் எது?

(1) இறுதி நிகரச் சொத்துக்கள் - ஆரம்ப நிகரச் சொத்துக்கள் + எடுப்பனவுகள் + மேலதிக மூலதனம்

(2) இறுதி நிகரச் சொத்துக்கள் - ஆரம்ப நிகரச் சொத்துக்கள் + எடுப்பனவுகள் - மேலதிக மூலதனம்

(3) ஆரம்ப நிகரச் சொத்துக்கள் - இறுதி நிகரச் சொத்துக்கள் - எடுப்பனவுகள் - மேலதிக மூலதனம்

(4) ஆரம்ப நிகரச் சொத்துக்கள் + இறுதி நிகரச் சொத்துக்கள் - எடுப்பனவுகள் - மேலதிக மூலதனம்

(02 புள்ளிகள்)

**1.5** உரிமையாளரால் ஈடுபடுத்தப்பட்ட மேலதிக மூலதனமானது கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தை கீழ்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க:

(1) சொத்துக்களில் வீழ்ச்சியும் உரிமையாண்மையில் வீழ்ச்சியும்

(2) சொத்துக்களில் அதிகரிப்பும் உரிமையாண்மையில் வீழ்ச்சியும்

(3) சொத்துக்களில் அதிகரிப்பும் உரிமையாண்மையில் அதிகரிப்பும்

(4) சொத்துக்களில் வீழ்ச்சியும் உரிமையாண்மையில் அதிகரிப்பும் (02 புள்ளிகள்)

**1.6** 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காலப்பகுதியில் **ABC டிரேடர்ஸினால்** செய்யப்பட்ட செலவுகள் கீழ்வருமாறு:

| விபரம் | ரூபா |
|---|---|
| காட்சியறையின் நிருமாணக் கிரயம் | 525,000 |
| காட்சியறை ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பளம் | 63,000 |
| காற்று பதனப்படுத்தியின் (Air conditioner) கிரயம் | 92,000 |
| 2018/19 ஆண்டிற்கான காட்சியறை காப்புறுதிக் கட்டணம் | 28,000 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில் 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **ABC டிரேடர்ஸின்** மொத்த மூலதனச் செலவாக அமைவது:

(1) ரூபா 708,000/-. (2) ரூபா 617,000/-. (3) ரூபா 525,000/-. (4) ரூபா 680,000/-.

(02 புள்ளிகள்)

**1.7** கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையிலுள்ள கொடுக்கல் வாங்கல் கோப்பொன்று தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

(1) அது மூல ஆவணங்களிலுள்ள தரவுகளைச் சுருக்கமாகத் தருகின்றது.

(2) அது குறுகிய காலத்திற்கு மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றது.

(3) தொங்கல் கணக்கானது கொடுக்கல் வாங்கல் கோப்பொன்றிற்கு உதாரணமாகும்.

(4) மேற்கூறிய யாவும் (02 புள்ளிகள்)

**1.8** கணக்குகளின் பாரம்பரிய வகைப்படுத்தலின் கீழ் பெயரளவிலான கணக்கொன்றிற்கான உதாரணமாக அமைவது எது?

(1) கட்டடக் கணக்கு (2) மோட்டார் வாகனக் கணக்கு

(3) வங்கிக் கடன் கணக்கு (4) விற்பனைக் கணக்கு (02 புள்ளிகள்)

***1.9*** *முதல்* ***1.15*** *வரையான வினாக்களுக்கு உரிய விடைகளை, உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒழுங்குமுறையாக (ஒன்றன்கீழ் ஒன்றாக) எழுதி, அந்த இலக்கங்களுக்கு எதிரே எழுதுக.*

**1.9** பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும் ஊடுசெயல்களின் மூன்று (03) வகைகளைப் பட்டியலிடுக. (03 புள்ளிகள்)

**1.10** கீழ்வரும் ஊடுசெயல்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருக்களை (Accounting concepts) இனங்காண்க.

(a) ஒரு கம்பனி தொக்கு மதிப்பீட்டிற்காகப் பின்பற்றுகின்ற முறையை மாற்றாது தொடர்ந்தும் பின்பற்றுதல் வேண்டும்.

(b) ஒவ்வொரு ஊடுசெயலும் காசு அடிப்படையில் பதிவு செய்யப்படுகின்றது.

(c) உரிமையாளரால் தனது தனிப்பட்ட பாவனைக்காக எடுக்கப்படும் பொருட்கள் எடுப்பனவு களாகக் கருதப்படுகின்றன. (03 புள்ளிகள்)

**1.11** ஒரு வியாபாரத்தில் அக்கறை கொண்ட தரப்பினர் (நாட்டதாரர்) மூவரைக் (03) குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

**1.12** கீழ்வரும் தகவல்கள் **சுப்பர் டிரேடர்ஸின்** 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன:

| | **ரூபா** |
|---|---|
| 2019 மார்ச் 31 இல் மொத்தச் சொத்துக்கள் | 950,000 |
| 2018 ஏப்ரல் 01 இல் மூலதனம் | 400,000 |
| ஆண்டிற்கான இலாபம் | 150,000 |
| ஆண்டின்போது ஈடுபடுத்தப்பட்ட மேலதிக மூலதனம் | 100,000 |
| ஆண்டின்போதான எடுப்பனவுகள் | 75,000 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2019 மார்ச் 31 ஆந் திகதியில் இருந்த மொத்தப் பரிப்பின் பெறுமதியைக் கணிக்குக. (03 புள்ளிகள்)

**1.13** **சாம் டிரேடர்ஸ்** இயந்திரமொன்றை 2018 ஏப்ரல் 01 இல் ரூபா 750,000/- இற்கு கொள்வனவு செய்து, அதே நாளில் நிறுவியிருந்தது (Installed). இயந்திரத்தின் நிறுவுதல் கிரயம் ரூபா 125,000/- ஆகும். கம்பனியின் கொள்கையானது இயந்திரத்திற்கு நேர்கோட்டு அடிப்படையில் ஆண்டிற்கு 20% இல் பெறுமானத் தேய்வு செய்வதாகும்.

2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இயந்திரத்தின் பெறுமானத் தேய்வினைக் கணிக்குக. (03 புள்ளிகள்)

**1.14** பொதுக் கணக்கீட்டு மென்பொருள் பொதிகளுக்கான உதாரணங்கள் மூன்றினைக் (03) குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

**1.15** புத்தகசாலையொன்றின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஊடுசெயல்கள் ஒவ்வொன்றிற்குமான சரியான இரட்டைப் பதிவுகளைக் குறிப்பிடுக:

(a) மார்ச் மாதத்திற்கான மின்கட்டண சென்மதிகள் ரூபா 82,000/- ஆகும்.

(b) மீள் விற்பனைக்காக கடனடிப்படையில் ரூபா 25,000/- பெறுமதியான எழுதுபொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

(c) ரூபா 12,000/- வட்டி வருமானமானது வியாபார வங்கிக் கணக்கிற்குக் கிடைக்கப் பெற்றிருந்தது. (06 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

**விஜயா** என்பவர் ரூபா 1,400,000/- இனை முதலீடு செய்து **விஜயா ஹாட்வெயார்** என்ற ஹாட்வெயார் உருப்படிகளை விற்பனை செய்யும் தனியுடமை வியாபாரத்தை 2018 ஏப்ரல் 01 ஆந் திகதி ஆரம்பித்தார்.

(1) 2018 ஏப்ரல் 01 இல் அவரால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப மூலதனத்தின் விபரங்கள் கீழ்வருமாறு:

| | **ரூபா** |
|---|---|
| மோட்டார் லொறி | 750,000 |
| காசு | 650,000 |
| **மொத்தம்** | **1,400,000** |

(2) 2019 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட காசுக் கொடுக்கல் வாங்கல்கள் கீழ்வருமாறு:

| **காசுப் பெறுவனவுகள்** | **ரூபா** |
|---|---|
| காசு உள்ளீடு | 650,000 |
| காசு விற்பனை | 2,500,000 |
| வியாபாரக் கடன்பட்டோரிடம் இருந்தான பெறுவனவுகள் | 1,300,000 |
| வங்கிக் கடன் | 500,000 |
| | **4,950,000** |

| **காசுக் கொடுப்பனவுகள்** | **ரூபா** |
|---|---|
| சம்பளங்களும் கூலிகளும் | 600,000 |
| மின்சாரம் | 68,000 |
| வியாபாரக் கடன் கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள் | 3,280,000 |
| எடுப்பனவுகள் | 210,000 |
| | **4,158,000** |

(3) 2019 மார்ச் 31 இல் எந்தவித இருப்புகளும் காணப்படவில்லை.

(4) 18% ஆண்டு வட்டி வீதத்தில் 2019 மார்ச் 31 இல் வங்கிக் கடனொன்று பெறப்பட்டதுடன் மூலதன மீள் கொடுப்பனவானது 2019 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.

(5) 2019 மார்ச் 31 இல் வியாபாரத்தின் கணக்கேடுகளில் காணப்பட்ட வருமதிகள் மற்றும் சென்மதிகளின் மீதிகள் கீழ்வருமாறு:

| | **ரூபா** |
|---|---|
| அட்டுறு மின்சாரம் | 18,000 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 275,000 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 225,000 |

(6) மோட்டார் லொறியானது நேர்கோட்டு அடிப்படையில் ஆண்டிற்கு கிரயத்தில் 25% பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றது.

***நீங்கள் செய்யவேண்டியவை:***

2019 மார்ச் 31 இல் **விஜயா ஹாட்வெயாரின்** பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 03

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் பிளாஸ்ரிக் பொருட்கள் உற்பத்தியாளரான **வரையறுக்கப்பட்ட KP கம்பனியின்** 2019 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்:

| | **ரூபா** |
|---|---|
| 2018 ஏப்ரல் 01 இலான தொக்கு: | |
| மூலப்பொருட்கள் | 1,200,000 |
| புத்துருவாகும் வேலை (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 885,000 |
| மூலப்பொருள் கொள்வனவு | 1,925,000 |
| நேர் கூலி – உற்பத்திப் பணியாளர்கள் | 1,765,000 |
| தொழிற்சாலை இயந்திரப் பராமரிப்பு | 335,000 |
| பெறுமானத்தேய்வு – கட்டடம் | 1,250,000 |
| பெறுமானத்தேய்வு – தொழிற்சாலை இயந்திரம் | 1,100,000 |
| தொழிற்சாலை முகாமையாளர் சம்பளம் | 625,000 |
| மின்சாரக் கட்டணம் | 750,000 |
| நீர்க் கட்டணம் | 420,000 |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) இறுதித் தொக்குகள் கீழ்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளன:

| | **2019 மார்ச் 31 இல் (ரூபா)** |
|---|---|
| மூலப் பொருட்கள் | 1,100,000 |
| புத்துருவாகும் வேலைகள் (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 975,000 |

(2) கட்டடத்தின் 80% மான நிலப்பகுதி தொழிற்சாலைக்கு உரியதாகும்.

(3) பின்வரும் செலவினங்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்:

| **செலவினம்** | **தொழிற்சாலை** | **அலுவலகம்** |
|---|---|---|
| மின்சாரக் கட்டணம் | 80% | 20% |
| நீர்க் கட்டணம் | 70% | 30% |

(4) உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களானவை கிரயத்தில் 10% இலாபத்துடன் வியாபாரப் பிரிவுக்கு மாற்றப்படுகின்றது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட KP கம்பனியின்** உற்பத்திக் கணக்கினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 04

2019 மார்ச் 31 இல் **மவுன்ற் ஸ்ரீல் டிரேடர்ஸின்** கணக்காளரால் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி இணங்கவில்லை. ஏற்பட்ட வித்தியாசமான ரூபா 114,900/- தொங்கற் கணக்கில் செலவுப் பதிவு செய்யப்பட்டு வரைவு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரைவு நிதிக் கூற்றின்படி நிகர இலாபமாக ரூபா 448,000/- காட்டப்பட்டிருந்தது.

பின்னர் கீழ்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன:

(1) அலுவலகப் பாவனைக்காகச் செய்யப்பட்ட ரூபா 85,000/- பெறுமதியான கணினிக் கொள்வனவானது கணினிப் பராமரிப்புக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டது. இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(2) ரூபா 65,000/- காசு விற்பனையானது விற்பனைக் கணக்கில் ரூபா 6,500/- ஆகப் பதிவு செய்யப் பட்டிருந்தது. ஆயினும் இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(3) நிலையான வைப்பு மீது பெறப்பட்ட வட்டி வருமானமான ரூபா 28,200/- ஆனது வட்டிச் செலவினக் கணக்கில் தவறுதலாக வரவுப்பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(4) ரூபா 275,000/- பெறுமதியான கடன் கொள்வனவுகள், கடன் கொடுத்தோர் கணக்கு மற்றும் கொள்வனவுக் கணக்கு ஆகிய இரண்டிலும் ரூபா 257,000/- ஆகப் பதிவு செய்யப்பட்டது.

(5) அலுவலக உபகரணங்கள் மீதான ரூபா 228,000/- பெறுமானத்தேய்வு, கணக்கேடுகளிலிருந்து முழுமையாக விடுபட்டுள்ளது.

**நீங்கள் தயாரிக்க வேண்டியவை:**

(a) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகள் (05 புள்ளிகள்)

(b) தொங்கற் கணக்கு (02 புள்ளிகள்)

(c) மேற்படி வழுக்களைத் திருத்திய பின்னரான சீராக்கப்பட்ட நிகர இலாபம். (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(A) தனியுடமை நிறுவனமான **சமன் டிரேடர்ஸின்** கணக்கேடுகளிலிருந்து 2019 சனவரி மாதத்திற்கான பின்வரும் தகவல்கள் பிரித்தறியப்பட்டன:

| திகதி | ஊடுசெயல் |
|---|---|
| 02.01.2019 | ரூபா 723,000/- பெறுமதியான பொருட்கள் மீள்விற்பனைக்காக கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டன. |
| 05.01.2019 | உரிமையாளரான **சமன்** தனது தனிப்பட்ட பாவனைக்காக ரூபா 50,000/- கிரயமான பொருட்களை எடுத்துள்ளார். |
| 10.01.2019 | ரூபா 575,000/- கிரயமான பொருட்கள், ரூபா 600,000/- க்கு கடனடிப்படையில் விற்பனை செய்யப்பட்டன. |
| 15.01.2019 | கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு ரூபா 550,000/- |
| 28.01.2019 | 2019 சனவரி மாதத்திற்கான தொலைபேசிப் பட்டியல் ரூபா 18,000/- ஆகும். ஆயினும் ரூபா 12,000/- மட்டுமே செலுத்தப்பட்டது. |
| 30.01.2019 | அலுவலகப் பாவனைக்காக ரூபா 500,000/- பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்று காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. |

**நீங்கள் செய்யவேண்டியது:**

கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டில் மேலே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஊடுசெயல்களினதும் தாக்கத்தினைப் பதிவு செய்க.

*[நடைமுறையல்லா சொத்துக்கள் (நிலையான சொத்துக்கள்) + தொக்கு + கடன்பட்டோர் + காசு = உரிமையாண்மை + பரிப்புக்கள்]* (06 புள்ளிகள்)

(B) **அமல் ஸ்ரோர்ஸ்** ஆனது எழுதுபொருட்களை விற்பனை செய்யும் தனியுடமை வியாபாரமாகும். 2019 மார்ச் மாதத்திற்கான **அமல் ஸ்ரோர்ஸ்** இன் கடன் விற்பனைகள் கீழ்வருமாறு:

| திகதி | சிட்டை இல | வாடிக்கையாளர் பெயர் | உருப்படி விபரம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | விபரம் | கணியம் | அலகு ஒன்றின் விலை (ரூபா) | வியாபாரக் கழிவு |
| 02.03.2019 | 217 | **வரை. ABC கம்பனி** | CR புத்தகங்கள் | 75 | 140 | 5% |
| 10.03.2019 | 218 | **கமல்** | பென்சில்கள் | 120 | 6 | - |
| 25.03.2019 | 219 | **பெரேரா** | பேனைகள் | 180 | 8 | - |

**நீங்கள் செய்யவேண்டியது:**

2019 மார்ச் மாதத்திற்கான **அமல் ஸ்ரோர்ஸின்** விற்பனை நாட்குறிப்பேட்டைத் (விற்பனை நாளேடு) **தயாரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

ஒரு (01) கட்டாய வினா

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

**MMK டிரேடர்ஸ்** ஆனது **மகீலிற்குச்** சொந்தமான தனியுடமை வியாபாரமாகும். 2019 மார்ச் 31 இலான **MMK டிரேடர்ஸின்** பரீட்சை மீதி கீழ்வருமாறு:

**MMK டிரேடர்ஸ்**

**2019 மார்ச் 31 இல் பரீட்சை மீதி** *(ரூபா '000)*

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (கிரயத்தில்): | | |
| காணி | 1,100 | |
| கட்டடங்கள் | 3,200 | |
| அலுவலக உபகரணம் | 2,400 | |
| மோட்டார் வாகனங்கள் | 2,800 | |
| திரள் தேய்மானம் - 2018 ஏப்ரல் 01 இல்: | | |
| கட்டடங்கள் | | 1,200 |
| அலுவலக உபகரணம் | | 1,195 |
| மோட்டார் வாகனங்கள் | | 1,275 |
| எடுப்பனவுகள் | 2,200 | |
| இருப்பு – 2018 ஏப்ரல் 01 இல் | 1,100 | |
| விற்பனைகள் | | 16,300 |
| கொள்வனவுகள் | 7,950 | |
| வியாபார வருமதிகள் | 4,320 | |
| வியாபார சென்மதிகள் | | 3,120 |
| மின்சாரம் | 1,930 | |
| சம்பளங்களும் கூலிகளும் | 1,800 | |
| அலுவலகப் பராமரிப்புச் செலவினங்கள் | 895 | |
| விளம்பரம் | 430 | |
| ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு – 2018 ஏப்ரல் 01 இல் | | 220 |
| வங்கி மேலதிகப் பற்று | | 1,890 |
| செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணம் | 300 | |
| வங்கி மேலதிகப் பற்று வட்டி | 375 | |
| 2018 ஏப்ரல் 01 இல் மூலதன மீதி | | 5,600 |
| | **30,800** | **30,800** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2019 மார்ச் 31 இல் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட இறுதி இருப்பின் பெறுமதி ரூபா 1,850,000/-.

(2) **மகீல்** தனது ரூபா 1,800,000/- பெறுமதியான தனிப்பட்ட மோட்டார் வான் (Van) ஐப் பிரயாணத் தேவைக்காக 2019 மார்ச் 31 இல் வியாபாரத்திற்கு மாற்றஞ் செய்தார். ஆயினும் இந்த ஊடுசெயல், கணக்கேடுகளில் பதியப்படவில்லை.

(3) வியாபாரத்தின் கொள்கையானது நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தின்மீது கீழ்வரும் வீதங்களில் பெறுமானத்தேய்வு செய்வதாகும்:

| | | |
|---|---|---|
| கட்டடங்கள் | : | 10 % |
| அலுவலக உபகரணம் | : | 20 % |
| மோட்டார் வாகனங்கள் | : | 25 % |

(4) காப்புறுதிக் கட்டணம் ரூபா 300,000/- ஆனது 2019 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2019 டிசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்குச் செலுத்தப்பட்டது.

(5) 2019 மார்ச் மாதத்திற்காகச் செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணம் (Electricity payable) ரூபா 148,000/- ஆகும். இது கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(6) 2019 மார்ச் 31 இலான வியாபார வருமதிகள் மீதியில் 10% ஐயக்கடனுக்கான பொது ஏற்பாட்டை மேற்கொள்ள **மகீல்** தீர்மானித்தார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

பின்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) 2019 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று. (11 புள்ளிகள்)

(b) 2019 மார்ச் 31 ஆந் திகதியில் நிதி நிலைக் கூற்று. (09 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |